# குணமாக்கும் ஒரு நிகழ்ச்சி (3:1-11)

பெந்தெகொஸ்தே நாளில் இருந்து எவ்வளவு காலம் கடந்திருந்தது என்று நாம் அறியவில்லை. ஆதி சபையாரின் செயல்பாடுகள் பற்றிய சுருக்கக் குறிப்பு லூக்காவால் 2ம் அதிகாரத்தின் முடிவில் தரப்பட்டுள்ளது. அது ஒருவேளை சில நாட்கள், வாரங்கள் அல்லது மாதங்களைக்கூட உள்ளடக்கி யிருக்கலாம். இப்போது இவ்வரலாற்றில் சிறிது இடை வேளைக்குப் பிறகு நடைபெற்ற கிளர்வூட்டும் ஒரு குண மாக்கும் சம்பவத்தைக் காண்கின்றோம். அப். 2ல் லூக்கா, "அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அடையாளங் களும் செய்யப்பட்டன" என்று சுட்டிக்காட்டினார் (வ. 43). அப். 3ல், அந்த அற்புதங்களில் ஒன்று - இது யூதமார்க்கத் தலைவர்களிடம் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தியதால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது நிச்சயம்-விவரிக்கப் படுகின்றது. இவ்விடத்தில், கிறிஸ்தவர்கள் "ஜனங்களெல்லா ரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்" (2:47). இங்கு சூழ்நிலை மாறியது. இயேசுவால், யோவான் 15:20ல் முன்னுரைக்கப் பட்ட உபத்திரவம் தொடங்கியது.

## உதவுபவர்கள் (3:1)

அதிகாரம் 3, ''ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே [மாலை சுமார் 3.00 மணி], பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்'' (வ. 1) என்று தொடங்கு கின்றது. பேதுரும், யோவானும் மீன் பிடிப்பதில் கூட்டாளி களாய் இருந்தவர்கள் (லூக். 5:10), பிறகு அவர்கள் இயேசுவைப் பின்பற்றினார்கள், நிறைவாக அவர்கள் இயேசுவின் நெருங்கிய வட்டத்துக்குள்ளான சீஷர்களாயினர் (மத். 17:1). கடைசி பஸ்காவை புசிக்க அவர்கள் இருவரும் இணைந்து ஆயத்தம்

செய்தனர் (லூக். 22:8); வெறுமையாயிருந்த கல்லறையைக் காண்பதற்கு இந்த இரண்டு பேரும் இணைந்து ஓடினர் (யோவா. 20:3, 4). இப்பொழுது இவ்விரு நண்பர்களும் ஒன்றா யிணைந்து தேவாலயத்திற்குச் சென்றுகொண்டிருந்தனர்.

பேதுருவும் யோவானும் "ஜெபவேளையில்" தேவாலயத் திற்குச் சென்றதால், அவர்கள் ஜெபம் செய்வது என்ற ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே அங்கு சென்றதாகப் பல விளக்கவுரையாளர்கள் யூகிக்கின்றனர். அவர்கள் ஒருவேளை அதற்காகச் சென்றிருக்கலாம்; ஆயினும் வசனப்பகுதியில் இம்முடிவுக்குத் தேவையான எதுவும் இல்லை.[1] அப்போஸ்தலர் களும், மற்ற கிறிஸ்தவர்களும் அநுதினமும் தேவாலயத்தில் கூடினர் (2:46) - அவர்கள் புறஜாதியாரின் மண்டபத்தில் கூடினர் (5:12) - ஏனென்றால் (1) அவர்கள் அனைவரும் கூடிவரக்கூடிய[2] பெரிய இடமாக அந்நகரில் அது ஒன்று மட்டுமே இருந்தது (2) இயேசுவைப்பற்றிக் கேள்விப்படத் தேவையுள்ள மக்கள் கூடும் இடமாக அது இருந்தது. பேதுருவும் யோவானு ம் இச்சம்பவத்தில் ஆலயத்திற்கு சென்றது ஏன் என்பதை முடிவு செய்ய, அவர்கள் அங்கு சென்றபோது என்ன செய்தனர் என்று நாம் கேட்பது தேவை. இயேசுவைப்பற்றிப் பிரசங்கிக்க அவர்களுக்கு வாய்ப்புத் தரக்கூடிய வகையில், அங்கு அவர்கள் ஒரு மனிதனைக் குணமாக்கினர். ஆகவே பேதுருவும் யோவானும் அங்கு கூடியிருந்த மக்களுக்கு, இயேசுவே கிறிஸ்து என்று அறிவிப்பதை அடிப்படையான நோக்கமாகக் கொண்டு தேவாலயத்திற்குச் சென்றனர் என்பதே பெரும்பாலும் உண்மையாயிருக்கும் (5:20, 21ஐக் காண்க).

அது அவர்களின் அடிப்படை நோக்கமாய் இருந்தால், அவர்கள் ஏன் "ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்தில்" அங்கு செல்ல வேண்டும்? அந்த நேரத்தில் தேவாலயத்தில் மிகப் பெரிய கூட்டம் ஒன்று இருக்கும் என்று அவர்கள் அறிந்திருந்த படியால் அந்நேரத்தை அவர்கள் தேர்ந்து கொண்டனர். ஒரு நாளில் மூன்று முறைகள் யூதர்கள் யாவரும் பெண்களின் மண்டபத்தில்[3] ஜெபம் செய்வதற்காக[4] ஒன்று கூடினர். இம்மூன்று முறைகளில் ஒன்று பிற்பகல் 3.00 மணியாகும்.

## உதவியற்றவர் (3:2)

பேதுருவும் யோவானும் தேவாலயத்திற்குச் செல்லுகையில், வேறு ஒருவர் அங்கு ஏற்கனவே இருந்தார், தேவாலய வளாகத்தில் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நிமிடமும் அவர் இருந்தார் - ஜெபம் செய்வதற்காக அல்ல, ஆனால் உயிர் வாழ்வதற்காக.

> *அப்பொழுது தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்து கொண்டு வந்தார்கள்; தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில்[5] பிச்சை[6] கேட்கும்படி, நாடோறும் அவனை அலங்கார வாசல் என்னப் பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள் (வ. 2).*

"தேவாலயம்" என்ற சொல்வழக்கு, அதன் முழுமையான அல்லது முழுமையின் சில பகுதிகளைக் குறிக்கப் பயன்பட்டது, எனவே இம்மனிதர் எவ்விடத்தில் அமர்த்தப்பட்டிருந்தார் என்பதை நாம் உறுதியாய் அறிய முடியவில்லை. உறுதியாய்க் கூறவேண்டுமென்றால், அவ்வளாகத்தின் மையப்பகுதியி லிருந்த பரிசுத்த கட்டிடம் - பரிசுத்த ஸ்தலமும் மகாபரிசுத்த ஸ்தலமும் உள்ள கட்டிடம் - மட்டும் தேவாலயமாக இருந்தது, இருப்பினும், தேவாலயப் பகுதியின் பரிசுத்த பாகம் முழுமை யும் - பெண்களின் மண்டபம் மற்றும் இஸ்ரவேலர்களின் மண்டபம் முழுமையும் - தேவாலயம் என்று குறிப்பிடப் பட்டது. மேலும், தேவாலயத்தின் முழு அமைப்பையும் - புறஜாதியாரின் மண்டபத்தையும் சேர்த்து - தேவாலயம் என்று பொதுவாக அழைக்கப்பட்டது. அநேகமாக இவ்விடத்தில் தேவாலயத்தின் பரிசுத்தமான பகுதியே குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும், மக்கள் ஜெபம் செய்யக் கூடும் இடமாகிய[7] பெண்களின் மண்டபத்தின் அருகில் "அலங்கார வாசல்" என்று அழைக்கப்பட்ட வாசலினருகே இப்பிச்சைக்காரர் அமர வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பழங்கால ஆதாரங்களின்படி, தேவாலயத்தின் பரிசுத்த பகுதிக்குள் வழி நடத்த, ஒன்பது வாயில்கள் இருந்தன. அவைகளில் எட்டு வாயில்களின் உயரம் 45 அடிகளாகும்; பெண்களின் மண்டபத்துக்குச் செல்லும் பிரதான வாயில் 75

அடிகள் உயரமுள்ளதாகும். பழங்கால எழுத்துக்களில் நிக்கானோர் வாயில் என்னப்பட்ட இது கொரிந்துப் பட்டணத் தின் வெண்கலத்தால் ஆனது. அதில் இருந்த கலை நுணுக்கம் நிறைந்த வேலைப்பாடுகள் யாவும் அதை "வெள்ளியினால் தகடு அடித்துப் பொன்னில் பதிய வைக்கப் பெற்ற மற்ற வாயில்களைக் காட்டிலும் உயர்வானதாகக் காட்டிற்று" என்று ஜோசிஃபஸின் எழுத்துக்களிலிருந்து, F.F. புரூஸ் விளக்குகிறார். இந்த வாயில் கிழக்கு நோக்கி இருந்தது; காலைச் சூரியனின் கதிர்கள் வெண்கலத்தில் பட்டு அக்கினி போன்று அழகாக மின்னிற்று. கற்றறிந்த அநேக அறிஞர்கள், இது "அலங்கார வாசல்" என்று அழைக்கப்பட்ட தாக நம்புகின்றனர்.

இந்த வாயிலின் அருகே, "தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த" மனிதர் ஒருவர் இருந்தார். இந்த மனிதர் பிறந்தபோது, அவரது கால்களும், கரடுகளும் முழு வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை.[8] அவரால் நிற்கவோ அல்லது நடக்கவோ முடியாதிருந்தது. இந்நாட்களில் உள்ள மருத்துவத் தொழில்நுட்பங்கள் அந்நாட்களில் கிடையாது. ஒருவர் சப்பாணியாகப் பிறந்தால், அவர் சப்பாணியாகவே இருந்தார். மேலும், ஒருவர் நடக்க முடியாதிருந்தால், அவரால் வேலை செய்யவும் முடியாதிருந்தது.[9]

இந்நிகழ்ச்சியைச் சரியானபடி உணர, இந்த மனிதரை நீங்கள் உங்கள் சிந்தனையில் (மனதில்) காண வேண்டியது அவசியம். அந்த மனிதர் "நாற்பது வயதுக்கு மேற்பட்டவரா யிருந்தார்" (4:22); அநேகமாக அவர் ஐம்பது அல்லது அறுபது வயதானவர் போல் காணப்பட்டார். அவருடைய நாற்பது ஆண்டுகளிலும் பயன்பட்டிராத அந்தக் கால்களைப் பாருங் கள். அதன் தசைகள் வளர்ச்சியடையாமல் இருந்திருக்கும்; எளிதில் உடையக்கூடிய எலும்புகளின்மேல் சுருக்கம் கொண்ட தோல் மூடியிருந்திருக்கும். இந்நாட்களைப் போலவே, அந்நாட்களிலும் பிச்சையெடுப்பவர்கள் தங்களது உடலில் ஊனமுற்ற பகுதியைப் முக்கியமாகக் காண்பித்து அதன் மூலம் இரக்கத்தை வெளிக் கொண்டுவர முயற்சித்தனர். இந்த மனிதர் ஒருவேளை, கிழிந்த உடையணிந்து, தமது உலர்ந்துபோன கால்களை, நடந்து செல்பவர்கள் பார்க்கும்படி வெளிப்படுத்தி யிருக்கலாம்.

*இந்த குறிப்பிட்ட நாளில், இந்த குறிப்பிட்ட மனிதரைப் பேதுருவும் யோவானும் குணப்படுத்தியது தற்செயலானதல்ல. அப்போஸ்தலர்களிடம் திடீரென்று ஏற்பட்ட மனவெழுச்சி யின் விளைவாக குணமாக்குதல் நடைபெற்றிருக்கவில்லை. பேதுருவும், யோவானும் இதற்குமுன் நூற்றுக் கணக்கான முறைகள் இம்மனிதரைக் கடந்து சென்றிருந்தனர்; இந்த மனிதரை அவர்கள் வேறு சில சந்தர்ப்பங்களில் குணமாக் கியிருக்கலாம். அவர்கள் இந்தக் குறிப்பிட்ட பிச்சைக் காரரை (அப்பகுதியில் பிச்சைக்காரர்களின் கூட்டம் நிறைந் திருந்தது) இந்தக் குறி ப்பிட்ட சந்தர்ப்பத்தில் குணமாக்கக் குறிப்பிட்ட சில காரணங்கள் இருந்தன: (1) அந்த மனிதர் அநேக ஆண்டு களாக அங்கிருந்ததால் ஒவ்வொருவரும் அவரை அறிந்திருந்த னர் (3:10, 16). (2) அவருக்கு நேர்ந்திருந்த துன்பமானது, அவர் குணமான பின்பு உண்மையிலே அற்புதம் நடந்தது என்று சந்தேகத்திற்கு இடமின்றி நம்பும்படியான இயல்புள்ளதாய் இருந்தது (4:16). (3) மிக விரைவில் ஒரு மக்கள் கூட்டத்தைக் கூட்டி, அவர்களை இயேசுவே கிறிஸ்து என்று ஏற்றுக்கொள்ளச் செய்வதற்கு இதைவிட வேறு வழியில்லா திருந்தது.[10]*

*அந்தப் பிச்சைக்காரருக்கு மற்ற ஆயிரக்கணக்கான நாட் களைப் போலவே அந்த நாளும் தொடங்கியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அவருடைய அந்த நாளை ஆயத்தம் செய்வது அவருக்கு ஒன்றும் கடினமாய் இருந்திருக்காது: அவர் அதிகாலையில் விழித்திருந்திருப்பார்[11] மற்றும் தம்முடைய பழைய, அழுக்கான, நாற்றம் பிடித்த கந்தலாடைக்குள் கஷ்டப்பட்டுக் கொண்டு-வயிற்றில் எழுந்த பசியின் வலியை பொருட்படுத்தாமல் இருக்க முயற்சித்திருப்பார்.[12] காலியான பணப்பை ஒன்றையும், காளான் பிடித்த ரொட்டித் துண்டு ஒன்றையும் தனது அங்கியில் எடுத்து வைத்துக் கொண்டு, கைப்பிடி நிறையப் புழுதியை அழுக்கான தரையிலிருந்து எடுத்து அதைத் தன் முகம், கால்கள் மற்றும் கைகளின் பின்புறம் ஆகியவற்றில் பூசிக் கொண்டார்.[13] அவரை ஆலயத்திற்குத் தூக்கிக்கொண்டு செல்ல ஆட்கள் வந்தபோது அவர் ஏறக் குறைய இவைகளை முடித்திருந்தார்.[14] அவர்கள் அவரைத் தூக்கிக் கொண்டு குறுகலான வீதிகளின் வழியே சென்று, பரபரப்பாயுள்ள புறஜாதியாரின் மண்டபத்தருகில் வழக்க*

மான இடத்தில் அவரைப் போட்டுவிட்டுச் சென்றனர். அவர் தமது ஊனமுற்ற கால்களை நன்கு தெரியும்படி அமைத்துக் கொண்டு, தனது முகத்தில் ஒரு பரிதாபத்தை உண்டாக்கிக் கொண்டு, அழுக்கான தன் கைகளை நீட்டிக் கொண்டு "பிச்சை போடுங்கள்! பிச்சைக்காரனுக்குப் பிச்சை போடுங்கள்" என்று கூவ ஆரம்பித்தார். அது அவருடைய இன்னொரு தெளிவற்ற நம்பிக்கையற்ற நாளாக இருந்தது. விரைவில் அவர் இயேசுவின் திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றில் ஒரு பங்காகப் போவதால் - அது மற்ற எல்லா நாட்களிலும் வித்தியாசமான தாகும் என்பதை அவர் அறிந்திருக்க முடியாதிருந்தது.

## நம்பிக்கையால் நிறைந்தவர் (3:3-6அ)

அது மாலைப் பலி செலுத்தும் நேரமாய் இருந்தது. அந்தப் பிச்சைக்காரரின் அங்கியிலிருந்த கிழிந்துபோன பணப்பை இன்னமும் இலேசாகவே இருந்தது.[15] ஜெபத்திற்கு வருபவர்கள் தாராள குணம் இல்லாதவர்களாயிருந்தால், அது இன்னுமொரு நீண்ட, பசியுள்ள, உறக்கமற்ற இரவாகப் போகிறது.[16] நன்கு அறியப்பட்ட இரு மனிதர்கள் நெருங்கி வந்தனர்: "தேவாலயத் தில் பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சை கேட்டான்" (3:3). பிறகு, வழக்கமற்ற ஒன்று நடைபெற்றது. பேதுருவும் யோவானும் அவனை உற்றுப் பார்த்து: "எங்களை நோக்கிப்பார்" என்றார்கள் (வ. 4). பொதுவாக, அங்கு கடந்து செல்கின்ற வர்கள் அம்மனிதரை உற்றுப்பார்ப்பதில்லை; அவர் இருக்கும் திசையில் ஒரு ஓரப்பார்வை பார்ப்பார்கள், அவ்வளவுதான். பிச்சை கொடுத்தவர்கள் கூட அவ்விடத்தில் காலம் தாழ்த்து வதில்லை; அவருடைய உள்ளங் கைகளில் ஒரு சிறு நாணயத்தை வைத்துவிட்டு வேகமாய்ச் சென்று விடுவர். இதனாலேயே இவரும் கடந்து செல்பவர்கள் யாவரையும் உற்றுப் பார்ப்பதில்லை, அவரது கண்கள் ஓரிடத்தில் நில்லாமல், கொடுப்பவர்களாகக் காணக்கூடியவர்களைத் தேடிக்கொண் டிருக்கும். இருப்பினும், இவ்விரு மனிதர்களும் அவருக்கு முன்னால் நின்று கொண்டு, அவரை உற்றுப்பார்த்து, "எங்களை நோக்கிப்பார்" என்றனர்.

''அவன் (பிச்சைக்காரன்) அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்றெண்ணி, அவர்களை நோக்கிப் பார்த்தான்'' (வ. 5). அன்று அவருக்கு இராவுணவில்லாமல் போகாது! அப்பொழுது பேதுரு: "வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை"[17] (வ. 6அ) என்றார். இப்பொழுது அந்தப் பிச்சைக் காரர் நம்பிக்கையிழந்திருக்க வேண்டும். அவர்களின் வழக்க மற்ற செயல்பாடு, கணிசமான தொகையொன்றைப் பெறும் ஒரு நம்பிக்கையை அவருக்குள் எழுப்பியிருந்தது; இப்போதோ அவர்களும் அவரைப் போன்றே ஏழைகள் என்று கூறப் பட்டது!

அந்தச் சப்பாணி பணத்தையே எதிர்பார்த்தார், குணமடை வதையல்ல என்பதை கவனியுங்கள். இந்நிகழ்ச்சிக்கு முன்ன தாக இவர் இயேசுவில் விசுவாசம் கொண்டவராக அல்லது "குணமாவதற்கான" குறைந்த அளவு விசுவாசம் உள்ளவராக இருந்தார் என்பதற்கான குறிப்புகள் எதுவும் வசனப்பகுதியில் காணப்படவில்லை. இதற்குப் பின்வரும் பேதுருவின் பிரசங்கத்தில், "அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினா லேயே [அதாவது இயேசுவின் நாமம்]'' (3:16) அம்மனிதர் குணமாக்கப்பட்டதாகப் பேதுரு குறிப்பிட்டார், ஆனால் அது அப்போஸ்தலர்களின் விசுவாசம்தானே தவிர, குணமாக்கப் பட்ட அந்த மனிதனுடைய விசுவாசம் அல்ல என்று நாம் காணப்போகின்றோம். பின்னாளில் இதே நிலையிலிருந்த வேறொரு மனிதரைப் பவுல் குணமாக்கியபோது, குணப்படுத்தப்பட்டவரிடம் விசுவாசம் இருந்ததாக வேத வசனம் நமக்குக் கூறுகின்றது (இ.வ. (14:9), [18] ஆனால் அப். 3ல் இவ்விதமான கூற்று எதுவும் இல்லை. இந்த விஷயத்தை நான் இவ்வளவு வலியுறுத்துவதற்கு வலுவான காரணம் ஒன்றுள்ளது: இந்நாட்களில் ''குணமாக்கும் வரம் பெற்றவர்கள்'' என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள், எவ்வித மாறுபாடுமின்றி, குணமடைதல் தேவைப்படுவோர் மீது, ''அவருக்குப் போதுமான விசுவாசம் இல்லை'' என்று பழி சுமத்தி விடுகிறார்கள்.[19] புதிய ஏற்பாட்டில் அற்புத வல்லமை பெற்றவர்களிடம் விசுவாசம் அவசியமாயிருந்தது (மாற். 16:17, 18) ஆனால் அந்த அற்புத வல்லமையினால் பயனடையத் தேவையானவரிடம் விசுவாசம் இருக்கவேண்டும் என்பது

அவசியமல்ல.[20] அப். 3ல் அந்த சப்பாணியிடம் விசுவாசம் இருந்தது என்று குறிப்பிடப்படவில்லை. அவர் பணத்தையே எதிர்பார்த்தார், குணமாக்குதலை அல்ல - பேதுரு “வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை’’ என்றபோது அவரது எதிர்பார்ப்பு சிதறியது.

## குணமாக்குதல் (3:6ஆ-8அ)

ஆயினும் பேதுரு இன்னும் தனது கூற்றை முடிக்கவில்லை: என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். ...’’ (வ. 6ஆ). உங்களிடமும் என்னிடமும் கூட வெள்ளியும் பொன்னும் இல்லாமல் இருக்கலாம், ஆனால் தேவனுடைய ஊழியத்தில் பயன்படுத்த வேறு எதையாவது நாம் எப்பொழுதும் பெற்றிருப் போம்: திறமைகள், நேரம் மற்றும் பெலம் முதலியன. தேவன் நம்மிடம் “உள்ளவைகளை” பயன்படுத்தும்படி கேட்கின்றார். இந்த நிகழ்ச்சியில் பேதுரு, வெள்ளி மற்றும் பொன்னைப் பார்க்கிலும் அதிக மதிப்புள்ளதை வைத்திருந்தார். அவர் தொடர்ந்து: ‘‘நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட!’’ என்றார். குணப்படுத்தும் நிகழ்ச்சிகளில் முதன்முதலாக இயேசு கிறிஸ்துவின் நாமம் பயன்படுத்தப்பட்டது இங்குதான் பதிவாகி உள்ளது, ஆனால் இது நிறைவானதாய் இருக்காது.[21]

“இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே” என்ற சொற்றொடர் ஏதோ ஒரு மாயமந்திரச் சொல்லைப் போன்று அப்போஸ்தலர் களால் பயன்படுத்தப்படவில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.[22] “இயேசு கிறிஸ்துவின் நாமத்தி னாலே’’ குணப்படுத்துவது என்பது, குணப்படுத்துதலுக்கு முழுப்பொறுப்பும் இயேசுவுக்குரியது என்பதை உறுதிப் படுத்துவதேயன்றி வேறில்லை! திமிர்வாதக்காரன் ஒருவனிடம், இயேசு “நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு, உன் வீட்டுக்குப் போ’’ என்று கூறியபோது பேதுருவும் யோவானும் அங்கிருந்தனர் (மாற். 2:11). அந்த மனிதன் எழுந்து, தனது படுக்கையை எடுத்துக் கொண்டு, கதவுக்கு வெளியே நடந்து சென்றபோது, எல்லாருடைய ஆச்சரியப் பார்வையையும் அவர்கள் கண்டிருந்தனர். குணமாக்கும்

*வல்லமை இன்னமும் இயேசுவுக்கிருந்தது என்பதில் அவர்களுக்குச் சந்தேகமில்லை.*

*அந்தப் பிச்சைக்காரர் இயேசுவைப்பற்றி நிச்சயமாய்க் கேள்விப்பட்டிருக்க வேண்டும்,[23] ஆனால் தர்க்கத்திற்குரியதான அப்பெயர் தான் நடப்பதுடன் எவ்வகையில் தொடர்புள்ளது என்ற கருத்து அநேகமாக அவரிடம் இருந்திருக்காது, பேதுரு தன்னைக் கேலி செய்வதாக அம்மனிதன் நினைத்திருக்கக் கூடும். அவனால் நடக்க முடியுமென்றால், இருபது வருடங்களாகப் பிறரிடம் பணத்திற்காகக் கெஞ்சி தனது சுய மதிப்பை ஏன் இழந்துகொண்டிருக்க வேண்டும்?*

*அம்மனிதர் அசையாதிருந்தபோது, பேதுரு ''வலது கையினால் அவனைப் பிடித்துத் தூக்கிவிட்டான்; உடனே அவனுடைய கால்களும், கரடுகளும் பெலன் கொண்டது''[24] (வ. 7). இனிவரும் வருடங்களில் அம்மனிதர் நிச்சயமாகவே, தனது பாதங்கள் மற்றும் கரடுகளில், தனது கால்கள் மற்றும் இடுப்புப் பகுதிகளில் பலம் பாய்ந்து ஓடிய அந்நிகழ்ச்சியை நினைவில் வைத்திருப்பார்.*

*மீண்டும் ஒருமுறை நீங்கள் இக்காட்சியைக் காணும்படி நான் விரும்புகிறேன். ஊனமுற்ற அந்தக் கால்களையும் கரடுகளையும், அந்த நோய்பற்றி, மெலிந்துபோன கால்களையும் நினைவுக்குக் கொண்டுவாருங்கள். அவை உங்கள் கண்களுக்கு முன்பாகவே நேராக்கப்பட்டு, நிரப்பப்படுவதைக் காணுங்கள்! தேவன் அதன் எலும்பமைப்பை நிறைவு செய்து, தசை மற்றும் தசை நார்களைக் கட்டி, அழிந்துபோன இரத்தக் குழாய்களை மறுபடியும் புதுப்பித்து, இறந்து கிடந்த நரம்பு முனைகளை மறுபடியும் உயிர்ப்பு நிலைக்குக் கொண்டுவந்து, உறைந்து கிடந்த இணைப்புக்களை அசையும் நிலைக்கு ஏற்படுத்தி - இவை யாவும் ஒரு கணப்பொழுதில் நடந்து முடிந்தது! அனைவரும் பார்க்கக்கூடிய வகையில் இவ்வற்புதம் நடந்தது! யாருமே மறுக்கக் கூடாத அற்புதமாக இது இருந்தது!*

*சதை மற்றும் எலும்புகளைக் குணப்படுத்துவதற்கும் மேலானதாக இந்த அற்புதம் இருந்தது. அந்தப் பிச்சைக்காரன் தனது சரீரத்தில் பலம் பாய்வதை உணர்ந்தபோது, இதற்குமுன் செய்யாத ஒன்றைச் செய்யத் தொடங்கினான்: ''அவன் குதித்தெழுந்து, நின்று[25] நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத்*

*துதித்துக்கொண்டு, அவர்களுடனே கூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்" (வ. 8). அவனுடைய கால்களும் கரடுகளும் பலம் கொண்டதைப் போன்றே, அம்மனிதன் உடனடியாக நடக்க முடிந்ததும், குதிக்க முடிந்ததும் அற்புதமாகவே இருந்தது. நான் ஒரு குழந்தையாக இருந்தபொழுது, நான் நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது; அதற்குச் சற்றுக் காலம் வேண்டியிருந்தது. பின்பு நான் குதிக்க கற்றுக் கொண்டேன். இதற்குமுன் நடந்தேயிராத இம்மனிதன் உடனடியாக நடக்கவும், குதிக்கவும் முடிந்தது. யாரேனும் ஒருவருக்கு பாதம் அல்லது கால்களில் படுகாயம் ஏதேனும் ஏற்பட்டுவிட்டால், அந்தப் பிரச்சனையானது சரி செய்யப் பட்ட பிறகு, மறுபடியும் நடக்கக் கற்றுக்கொள்ளும் பயிற்சிச் சிகிச்சை அவசியமாகிறது. இந்தப் பிச்சைக்காரனுக்கு எந்த ஒரு பயிற்சிச் சிகிச்சையும் தேவைப்படவில்லை. தேவன், நடத்தல் என்ற சிக்கலான பணிக்குரிய மற்றும் குதித்தல் என்ற மிக சிக்கலான பணிக்குரிய கட்டளைகள் யாவற்றையும் நூற்றுக் கணக்கான தசைகளுக்குள் அனுப்பும்படி இம்மனிதனின் மூளையில் எல்லா சைகைகளையும் ஊன்றி வைத்தார். பிற்பாடு ஆலோசனை சங்கத்தார், "எருசலேமில் வாசம் பண்ணுகிற எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி வெளியரங்க மான அற்புதம் இவர்களால் செய்யப்பட்டதே, அதை நாம் இல்லையென்று சொல்லக்கூடாது" என்று கூறியதில் வியப்பேதுமில்லை (4:16)!*

*அப்போஸ்தலர்களைப் போலவே இன்றைய நாட்களில் சிலர் குணப்படுத்துவதாகக் கூறிக் கொள்கின்றனர். சில வகை வியாதிகளை அவர்கள் குணப்படுத்த முடியும் என்பதில் எனக்கு ஐயம் எதுவும் இல்லை. மருத்துவர்கள், அநேக வியாதிகள் மனதிலேயே ஆரம்பிப்பதாகக் கூறுகின்றனர், மனம் சார்ந்த என்பதற்குரிய வார்த்தையான* "psychosomatic" *என்பது "மனம்" என்பதற்குரிய கிரேக்க வார்த்தையான* (*psuche*[26]) *மற்றும் உடல் என்பதற்குரிய கிரேக்க வார்த்தையான* (*soma*) *ஆகியவற்றின் இணைப்பாக உள்ளது. ஒரு வியாதி மனம் சார்ந்தது என்னும் போது, அது "முழுவதும் தலையில் (சிந்தனையில்) தான் உள்ளது." உடலில் எதுவும் இல்லை என்று பொருளாகாது. மனம் சார்ந்த வியாதி என்னும்போது, மனம் பாதிக்கப்பட்டால் உடலும், உடல் பாதிக்கப்பட்டால் மனமும் வியாதிப்படு*

*வதைக் குறிக்கின்றது. நாம் உடல் வியாதியாய் இருக்கும் பொழுது மனமானது மிக சுலபமாக சோர்வடைவது உண்மை யல்லவா? நாம் மனரீதியாக சோர்வடையும்போது, நமது உடல் பாதிக்கப்படுவதும் உண்மையல்லவா? - இது தலைவலியி லிருந்து வயிற்றுக்கோளாறு வரை பலவிதமான பிரச்சனைகளை ஏற்படுத்திவிடுகின்றது அல்லவா? அநேகர் உணர்ந்திருப்பதைக் காட்டிலும், சரீரத்தின் மேல் மனதின் ஆதிக்கம், பெலமுள்ள தாய் இருக்கிறது. மனம் பாதிக்கப்பட்டதால் பார்வையிழந்த, செவித்திறன் இழந்த, உடல் ஊனமுற்ற மற்றும் பக்கவாதம் கூட வந்த, பல நிரூபணமான சம்பவங்கள் உள்ளன. மனம் சார்ந்த பிரச்சனையால் ஒருவர் நோயுற்று இருக்கையில், அவரிடத்தில் குணம் பெறக்கூடிய சக்தியுண்டென்று யாரேனும் அவரை நம்பவைத்துவிட்டால் அவர் குணமாக்கப் பட முடியும். (இப்படிப்பட்ட குணமாக்குதலில், குணம் பெறுபவரிடம் உள்ள விசுவாசமே முக்கியமானதாகும்.) குணப்படுத்துவோர் என்று தங்களை அழைத்துக் கொள்வோர், சில வியாதிகளைக் குணப்படுத்துவதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லையென்று மறுபடியும் நான் கூறுகிறேன்.*

*அன்று அப்போஸ்தலர்கள் குணமளித்ததுபோல் இன்று இவர்கள் குணமளிக்க முடியுமா என்பதுதான் என்னுடைய சந்தேகம் ஆகும்! "குணமளிக்கும் ஆராதனை" நிகழ்ச்சிகளுக்குச் சென்றிருக்கிறேன், மற்றும் அநேக முறை அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தொலைக் காட்சியில் கண்டிருக்கிறேன். அலங்கார வாசல் அருகே நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைத் தூரத்திலாவது ஒத்துப் போகக்கூடிய ஏதொன்றையும் இவைகளில் நான் காண வில்லை, மேடைகளுக்கு முன்னால் தங்கள் ஊன்று கோல்களை வைத்துவிட்டுத் தள்ளாடி நடப்பவர்களைப் பார்த்துள்ளேன் ... தங்கள் சக்கர நாற்காலி களில் இருந்து எழுந்து சற்று கால்களைத் தூக்குபவர்களைப் பார்த்துள்ளேன் ... ஆனால் உலர்ந்துபோன கால்கள் என் கண்களுக்கு முன்பாக நிரப்பப்பட்டதை நான் ஒருபோதும் கண்டதில்லை. ... இதற்கு முன் என்றுமே நடந்திராதவர் நடப்பதையும் குதிப்பதையும் நான் ஒருபோதும் கண்டதில்லை. இதைக் குறித்துக் கொள்ளுங்கள்: இன்றும் தேவன் நமது வாழ்க்கையில் செயலாற்றுகின்றார், ஆனால் புதிய ஏற்பாடு*

எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் அவரது செயல்முறைகளிலிருந்து, இன்றைய நாட்களில் அவரது செயல்முறைகள் மாறுபட்டுள்ளன. தேவன் இன்றும் நாம் நலமடைய உதவுகின்றார், ஆனால் இந்த சப்பாணியைக் குணப்படுத்தும்போது செய்ததுபோல் இன்று அவர் இயற்கை விதிகளை அந்தரத்தில் தொங்கவிட்டுச் செய்வதில்லை. அன்று தேவன் அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்திருந்த அதே வல்லமை இன்று எவரிடமும் இல்லை![27]

## சந்தோஷமானவர் (3:8ஆ-11)

மறுபடியும் நாம் இந்நிகழ்ச்சிக்குத் திரும்புவோம்: குணப் படுத்தப்பட்ட அந்த சப்பாணி, பேதுருவும், யோவானும் நாம் பேசிக்கொண்டிருந்த இந்த வல்லமையைப் பெற்றிருந்தது பற்றி பெரும் மகிழ்ச்சியடைந்தான். மதிப்புப் பார்ப்பதென்பது யாவும் தூக்கியெறியப்பட்டது; நாற்பதிற்குப் பதில் நான்கு வயதானவன்போல அவன் தாவிக் குதித்தோடினான். வசனம் 8ல், அவன் புதிதாய்க் கண்ட சுகத்திற்காக ''தேவனைத் துதித்தான்'' என்று குறிப்பிட்டுள்ளது; தனது சுகத்தின் உண்மைப் பிறப்பிடத்தை அவன் அடையாளம் கண்டு கொண்டான். பேதுருவும் யோவானும் பெண்களின் மண்டபத்திற்குச் சென்றபோது, அவன் அவர்களைவிட்டு தனியே தங்கிவிடவில்லை. "தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனே கூட தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்" (வ. 8ஆ).

ஜெபம் செய்ய அங்கு கூடியிருந்தவர்கள் யாவரும் வியப்புற்றிருக்க வேண்டும். எதிர்வரும் ஞாயிறு காலை ஆராதனை நேரத்தில், யாரோ ஒருவர் மேடைக்கு ஓடிவந்து, மூளைக் கோளாறு உள்ளவர் போல குதிக்கவும், தாவவும் செய்து, "தேவனுக்கு நன்றி'' என்று கத்திக்கொண்டிருந்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். குணமாக்கப்பட்ட பிச்சைக்காரன் பெண்களின் மண்டபத்தில் இவ்வாறு செய்தபோது, அங்கு உணர்வுகள் கிளர்ந்து எழுந்த நிலையொன்று ஏற்பட்டிருக்க வேண்டும். முதலாவது, மக்கள் அங்கு திகைத்திருக்க வேண்டும்: "பரிசுத்தமான இந்த ஆராதனையில் இடையூறு செய்ய பண்பற்ற இவனுக்கு எவ்வளவு தைரியம்

இருக்க வேண்டும்!'' என்று முதலில் எண்ணியிருப்பார்கள், ஆயினும் விரைவிலேயே அவர்களின் எரிச்சல் வியப்பாக மாறியது:

> அவன் நடக்கிறதையும், தேவனைத் துதிக்கிறதையும், ஜனங்களெல்லாரும் கண்டு:[28] தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே பிச்சை கேட்டு உட்கார்ந்திருந்தவன் இவன்தான் என்று அறிந்து, அவனுக்குச் சம்பவித்தைக் குறித்து மிகவும் ஆச்சரியப்பட்டுப் பிரமித்தார்கள் (வ. 9, 10).

வசனம் 11, அந்தப் பிச்சைக்காரன் ''பேதுருவையும் யோவானையும் பற்றிக்கொண்டிருந்ததாக'' கூறுகிறது, அவன் அப்போஸ்தலர்களைப் பற்றிக்கொண்டு, எல்லாரும் கேட்கும் படி: "நான் எப்பொழுதும் அமருமிடத்தில் அமர்ந்து, பிச்சை கேட்டுக் கொண்டிருந்தேன். இம்மனிதர்கள் வந்து என்னை எழுந்து நட என்று சொன்னார்கள். பிறகு இம்மனிதர் என்னைத் தூக்கி விட்டார் - தேவன் என்னை குணமாக்கினார்! பாருங்கள்!'' என்று உரக்கப் பேசுவதை என்னால் காண முடிகிறது.

காற்றில் அவன் உயரக் குதித்துக் கீழே வந்தபோது, சிரிப்பலைகள் ஒவ்வொரு காதிலும் வந்து மோதியபோது, அந்த அற்புதம் நடந்திருந்ததை ஒருவரும் சந்தேகிக்க முடியவில்லை. அக்கூட்டத்தார், பேதுரு, யோவான் மற்றும் அந்தப் பிச்சைக் காரன் ஆகியோரிடம் பல கேள்விகளைக் கேட்டுக் கூக்குரலிட்டதை நான் கேட்க முடிகிறது. அங்கு நடந்ததைப் பற்றிய செய்தி தேவாலயத்தின் மற்ற பகுதிகளுக்கும் பரவியது,[29] கூட்டம் இன்னும் அதிகமாயிற்று, பெண்கள் மண்டபம் முழுவதும் நிரம்பிற்று. நிறைவாகப் பேதுரு தனது கைகளை உயர்த்தி அனைவரும் தன்னைப் பின்பற்றி வரும்படி சைகை செய்தார். அவர் அவர்களை புறஜாதியாரின் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார், அங்கு அவர் பேசுவதைக் கேட்பதற் கேற்ற வகையில் இடமிருந்தது.[30] "குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும்[31] பற்றிக்கொண்டிருக்கையில், ஜனங்களெல்லாரும் பிரமித்து (பார்க்ளே, ''முற்றிலும் திகைப்படைந்த நிலையில் இருந்தனர் என்கிறார்), சாலமோன் மண்டபம்[32] என்னப்பட்ட மண்டபத்திலே அவர்களிடத்திற்கு

*ஓடி வந்தார்கள்" (வ. 11).*

*புறஜாதியாரின் முற்றத்தின் கிழக்குச் சுவரின் உட்பகுதியில் சாலமோனின் மண்டபம் இருந்தது. அது 600 அடி நீளமும் 60 அடி அகலமும் உள்ளது. அது இரு வரிசைகளில் அமைந்த 27 அடி உயரம் உள்ள தூண்களைக் கொண்டிருந்தது, அதன் மேற் கூரை கேதுரு மரத்தினால் ஆனது.[33] இயேசு இவ்விடத்தில் ஊழியம் செய்திருந்தார் (யோவா. 10:23), ஆதி கிறிஸ்தவர்கள் கூடுவதற்கு ஒரு நன்கறியப்பட்ட இடமாக இது விளங்கிற்று (5:12). இங்கு அனைவராலும் பார்க்க மற்றும் கேட்க முடிந்த ஓரிடத்தில் பேதுரு நிற்க முடிந்தது.*

*யோவான் ஸ்நானன் முதல் எல்லா செய்தியாளர்களுக்கும், "சப்பாணிகள் நடக்கிறார்கள்" (லூக். 7:22; மத். 11:5) என்பதை வைத்து மேசியா வந்திருந்தார் என்பதை அறிய முடியும் என்று கூறப்பட்டு இருந்தது. மேசியாவின் காலத்தைப்பற்றி ஏசாயா தீ ர்க்கதரிசி எழுதும்போது, "அப்பொழுது முடவன் மானைப் போல் குதிப்பான்" (ஏசா. 35:6) என்று கூறினார். சாலமோன் மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் இந்த தீர்க்கதரிசனம் கண்களுக்கு முன்பாக நிறைவேறியதைக் கண்டனர். பேதுரு அவர்களின் முழு கவனத்தையும் பெற்றார்;[34] அவருடைய பிரசங்கத்திற்கு அவர்கள் தயாரானார்கள்.*

## முடிவுரை

*நமது அடுத்த பாடத்தில் நாம் பேதுருவின் பிரசங்கத்தைக் கற்போம், ஆனால் இப்போது இதை நிறைவு செய்து, இதை நமக்கு நடைமுறைப்படுத்த வேண்டும். முன்னதாக, அந்தப் பிச்சைக்காரனை விளக்க, நான் உருவக நடையைக் கையாண் டேன். உங்கள் பதில்செயல் என்னவாயிருந்தது? நீங்கள் இன்னும் கிறிஸ்தவராகாதிருந்தால், ''சரீரப்பிரகாரமாக அம்மனிதன் ஊனமுற்றவனாயிருந்ததுபோல ஆவிக்குரிய முறையில் நான் ஊனமுற்றவனாய் இருக்கிறேன்'' என்ற எண்ணம் உங்கள் சிந்தையில் தோன்றியதா? அம்மனிதன் குணமாக்கப்பட்டதை நான் விவரித்தபோது, ''நான் கூட எழுந்து நின்று நடப்பதற்குக் கர்த்தருடைய உதவி எனக்குத் தேவைப்படுகிறது" என்று நீங்கள் உணர்ந்தீர்களா? (3:26).*

கர்த்தர் நமக்கு ஆவிக்குரிய சுகத்தைக் கொடுக்கத் தயாராய் இருக்கையில், இந்த சப்பாணியைப் போலவே நம்மில் அநேகர் கர்த்தரிடத்தில் ‘‘சில்லறைக் காசுகளைக்’’ கேட்பவர்களாய் இருக்கிறோம். குணமாக்கும் வல்லமை இன்றும் இயேசுவின் நாமத்தில் உண்டு. அவருடைய பரிசுத்த நாமத்தை இன்னும் நீங்கள் அறிக்கையிடாமல், அவருடைய நாமத்திலே ஞானஸ் நானம் பெறாமலிருந்தால், இதுவே அதற்கான நேரம் ஆகும். அந்தப் பிச்சைக்காரன் செய்தது போலவே நீங்களும் இன்றே “சந்தோஷத்தால் குதித்து” தேவனை துதிக்க முடியும்!

## காட்சி-உதவிக் குறிப்புகள்

அநேக ஆண்டுகளுக்கு முன், “விசுவாச குணம் அளிப்பவர்” என்பவர் ஒருவர் தமது முகவரிகளின் பட்டியலில் எனது முகவரியைப் பெற்றிருந்தார். பல மாதங்களாக அவரிடமிருந்து ஆரோக்கியம் மற்றும் ஐசுவரியத்தைத் தரும் என்று கூறப்பட்ட பல பொருட்கள் எனக்கு அனுப்பப்பட்டன. அநேக மாயமந்திரப் பொருட்களுடன், குணமாக் கும் ஒரு துணி, குணமாக்கும் எண்ணெய், ஒரு ஜெபிக்கும் துணி மற்றும் ஜெபிக்கும் மெழுகுவர்த்தி ஆகியவற்றை நான் பெற்றேன். இவைகளில் எனது ‘‘விருப்பத்திற்குரியதாய்’’ இருந்தது, ஒரு கரத்தின் அச்சு பதிக்கப்பட்ட ஒரு தொப்பியாகும். அத்துடன் இணைந்து வந்த கடிதத்தில், ‘‘குணப்படுத்துபவர்’’ தமது கைகளை அத்தொப்பி மீது வைத்திருந்ததாகவும், ஆகவே அத்தொப்பியை நான் என் தலை மீது வைத்தால், அது “குணப்படுத்துபவரே” என் தலை மீது கைகளை வைப்பதற்கு ஒப்பாயிருக்கும் என்றும் எழுதப்பட்டிருந்தது! இந்த ஆதாரங் களைக் கொண்டு, நான் அப்போஸ்தலர்களின் செயல் பாட்டிற்கும், இந்நாட்களில் ‘‘குணம் அளிப்பவர்’’ என்று கூறுவோர்களின் செயல்பாட்டிற்கும் உ ள்ள முரண்பாட்டை விளக்குவதுண்டு. உங்கள் பகுதியில் ‘‘குணமாக்குபவர்கள்’’ பயன்படுத்தும் இவ்விதப் பொருட்களை நீங்கள் காண முடியும்.

## ❦ பிரசங்கக் குறிப்புகள் ❦

*இந்நாட்களில் நடப்பதாகக் கூறப்படும் அற்புதங்கள் என்பவைகளை வேதாகமத்தின் அற்புதங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதே இவ்விவாதத்திற்கு மிகவும் பயனுள்ள வழியாகும். இதைச் செய்ய அப். 3 உங்களுக்கு ஒரு வாய்ப்பளிக்கிறது. அப். 3ல் உள்ள எடுத்துக்காட்டை, இன்றைய நாட்களில் குணமாக்கும் நிகழ்ச்சிகளுடன் மாறுபாடாய் ஒப்பிட்டுப் பிரசங்கிக்க நீங்கள் விரும்பலாம். உங்கள் பாடம் 3:1-11ஐ மையமாகக் கொண்டு இருக்கும், ஆனால் அப். 3 மற்றும் 4ல் இருந்து மற்ற சில வசனங்களின் விபரங்களையும் நீங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கும் (3:12, 16; 4:7-10, 14, 15, 22; முதலியன).*

---

குறிப்புகள்

*[1]முந்திய இதழில், "நான் அங்கம் வகிக்க விரும்பும் ஒரு சபை" என்ற பாடத்தின் அடிக்குறிப்பில், யூதகிறிஸ்தவர்கள் தேவாலயத்தில் ஆராதித்ததைப்பற்றி நாம் கலந்துரையாடியிருந்தோம். தேவன் தமது சித்தத்தை உடனடியாக வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது உண்மையாயிருப்பினும், ஆதி கிறிஸ்தவர்கள் அறியாமலிருந்தவை ஏராளமாயிருந்தன என்றாலும், கிறிஸ்தவர்கள் எப்படி ஆராதிக்க வேண்டும் என்பது முதன் முதலில் வெளிப்படுத்தப்பட்டவைகளில் ஒன்றாய் இருந்தது (2:42). அப். 2 அல்லது 3ல் வேறு எந்த வசனப்பகுதியும், யூதர்களின் முறைமையினின்று தனிப்பட்டதொரு ஆராதனையை ஆதி கிறிஸ்தவர்கள் பின்பற்றினர் என்று கூறுவதில்லை. எவ்வாறாயினும், கி.பி. 70ல் தேவாலயத்தின் அழிவானது எஞ்சியிருந்த அவர்களின் (தேவாலயத்துடனான) இணைவை உடைத்திருந்தது. [2]தேவாலயமானது 6,00,000 சதுர அடிப் பரப்பளவைக் கொண்ட பகுதியாய் இருந்ததாக சில அதிகாரப்பூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன. [3]தேவாலய வளாகத்தின் பரிசுத்த பாகத்தில், பெண்களின் மண்டபமே அளவில் பெரியதாகவும், யூத ஆண்கள் மற்றும் பெண்கள் யாவரும் ஜெபிக்கக் கூடும் இடமாகவும் இருந்தது. அது ஏறக்குறைய இருநூறு சதுர அடிகள் பரப்பளவுடையதாகும். (இப்பாடத்தின் முற்பகுதியில் உள்ள தேவாலயத்தைப்பற்றிய அனைத்து குறிப்புகளையும் விளங்கிக் கொள்ள ஆலயத்தின் வரை படத்தைப் பார்க்கவும்). [4]சங். 55:17ல் தாவீது ''அந்தி சந்தி மத்தியான'' வேளைகளில் ஜெபித்ததாகக் குறிப்பிட்டுள்ளது. தானியேல் ''தினம் மூன்று வேளை'' ஜெபித்தார் (தானி. 6:10) இதில் அந்திப்பலியின் நேரமாகிய வேளையும் ஒன்று ஆகும் (தானி. 9:21). ஆசாரியர்கள் ஒருநாளில் இரண்டு தரம் ஒரு ஆட்டுக்*

குட்டியைப் பலி செலுத்தினர் (யாத். 29:38-43), காலையும் மாலையும் தூபம் காட்டுதலும் நடைபெற்றது (யாத். 30:1-10). பலி செலுத்துதலும், தூபங்காட்டுதலும் ஒரே நேரத்தில் நடைபெற்றிருக்க வேண்டும், இவைகள் நடக்கும்போது மக்கள் யாவரும் ஜெபிப்பதற்கென்று தேவாலயத்தில் கூடியிருப்பார்கள் (லூக். 1:8-10). இது, யூதர்கள் இவைகளை மட்டுமே ஜெபிப்பதற்கான நேரம் என்று கருதினர் என்பதாகப் பொருள் படுவதில்லை, குறிப்பிட்ட நேரங்களில் ஜெபிப்பதன் மதிப்பையும் மற்றும் சில நேரங்களில் ஜெபிப்பதையும் அவர்கள் அறிந்திருந்தனர். [5]அந்நாட்களில் பிச்சை எடுப்பதற்கு மூன்று முக்கிய இடங்கள் இருந்தன: (1) ஐசுவரியவான் களின் வாசல்கள் அருகே (லாசரு செய்ததுபோல), (2) முக்கிய சாலைகளில் (பர்த்திமேயு செய்ததுபோல), அல்லது (3) ஆராதனை செய்யும் இடங்களின் அருகே (இம்மனிதன் செய்ததுபோல). யூத மார்க்கத்தில் தர்மம் செய்வது என்பது புகழ்ச்சிக்குரிய ஒரு செயலாகும், ஆகவே ஆராதனைக்குச் செல்கின்ற மற்றும் அங்கிருந்து திரும்புகின்ற யாவரும் தர்மம் செய்வதைத் தங்கள் முக்கிய சிந்தனையாகக் கொண்டிருப்பார்கள். [6]"பிச்சை" என்பது பிரதிபலன் கருதாத உதவியாகும். NIVயி ல் வசனம் 3ல், ''அவன் அவர்களிடத்தில் பணம் கேட்டான்" என்றுள்ளது. [7]அந்தப் பிச்சை க்காரன் (பரிசுத்த ஸ்தலமும் மகாபரிசுத்த ஸ்தலமும் அடங்கிய) தேவாலயத்தின் பகுதிக்கு அருகில் அனுமதிக்கப்பட்டிருக்க மாட்டான், தேவாலயத்தின் முழுப் பகுதியையும் உள்ளடக்கிய வெளிப்புறச் சுவர் அருகில் உள்ள இடமோ பிச்சையெடுக்க ஏற்ற இடமாயிருக்கவில்லை. மாறாக, பெண்களின் மண்டபத்திற்குச் செல்லுமிடம் பிச்சையெடுக்க ஏற்ற இடமாகும். [8]அவனது பிரச்சனை ''அவனது பாதங்கள் மற்றும் இணைப்புகளில்" இருந்ததாக வசனம் 7ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அவனு டைய மூட்டு இணைப்புகள் வளர்ச்சி பெறாததே அவனுடைய பிரச்சனை என்று சிலர் எண்ணுகின்றனர். [9]மேசை வேலைகள் அந்நாட்களில் இருந்ததில்லை.[10] என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். பேதுரு மற்றும் யோவானிடத்திலிருந்த இரக்க குணம் மற்றும் தயாள குணம் ஆகியவற்றை நான் குறைத்து மதிப்பிடவில்லை, ஆனால் நூற்றுக்கணக்கான உடல் ஊனமுற்ற பிச்சைக்காரர்கள் குணப்படுத்தப்பட்டிருக்கலாம். இக்குறிப்பிட்ட நிகழ்ச்சியில் இக்குறிப்பிட்ட மனிதனைத் தெரிந்து கொண்டதற்கு, ஏதேனும் சிறப்பான காரணம் இருக்க வேண்டும்.

[11]குறைந்தது காலை 8.30 மணிக்காவது அவன் தேவாலயத்தில் இருக்க வேண்டும். முதலாம் "ஜெபவேளை" காலை 9.00 மணியாக இருந்தது. [12]சில பிச்சைக்காரர்கள் அநேக வருடங்களுக்குப் பிறகு வளம் பெற்று விடுகின்ற னர், ஆனால் இந்த மனிதன் அப்படியாகவில்லை. அவன் குணமடைந்த போது, அவன் அதீத மகிழ்ச்சியடைந்தான், அவன் குணமாக்கப்பட்டதன் மூலம் பிழைக்க லாபமுள்ளதாயிருந்த வழி அற்றுப் போடப்படவில்லை யென்பதை இது சுட்டிக்காட்டுகின்றது. [13]இரக்கம் பெறுவதற்காக எவ்வளவு பரிதாபமாய் தோன்ற முடியுமோ அவ்வளவுக்கு மாறுவது என்பது பிச்சைக்காரர்களின் நடைமுறை வழக்கம் ஆகும். [14]இந்தச் சப்பாணி மனிதனை ஒவ்வொரு நாளும் தேவாலயத்திற்குத் தூக்கிச் சென்றது யார் என்று நமக்குக் கூறப்படவில்லை. ஒருவேளை அது அவனது நண்பர்களாய் இருக்கலாம். ஒருவேளை பிச்சையெடுக்கும் இடங்களுக்குப் பிச்சைக்காரர்

*களைத் தூக்கிச் செல்வதன் மூலம் பிழைப்பு நடத்துகின்றவர்களாய் இருக்கலாம். ஒவ்வொரு நாளின் முடிவிலும், பிச்சைக்காரர் தாம் பெறுவதில் ஒரு குறிப்பிட்ட சகவிகிதத்தை இந்த நபர்களுக்குத் தந்தனர். [15]பேதுரு மற்றும் யோவானிடத்தில் ஒரு தர்மப் பணத்தை அவன் எதிர்பார்த்த வகை இதன் மூலம் ஆலோசிக்கப்படுகிறது. [16]பிச்சைக்காரர்கள் பொதுவாக சேமிப்பு வைத்திருப்பதில்லை. ஒவ்வொரு நாளும் கிடைப்பதை வைத்தே அவர்கள் அந்நாளை ஓட்டுகின்றனர். [17]அப்போஸ்தலர்கள் ''ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும்'' தங்களை ஒப்புக்கொடுத்திருந்தபடியால் (6:4) அவர்கள் உயிர் வாழத் தேவையானவற்றை ஈட்ட நேரமின்றியிருந்தனர். மற்ற உறுப்பினர்களால் உதவி பெற்றவர்களுடன் அவர்களும் இருந்தனர் (2:45). [18]அப். 3 மற்றும் அப். 14ல் வரும் நிகழ்ச்சிகள் ஒன்றுபோலத் தோன்றுவதால், விளக்கவுரை யாளர்கள் இவ்விரண்டையும் ஒன்று என்று கூறுவதற்கு வாய்ப்புண்டு. ஆயினும் இவ்விரு நிகழ்ச்சிகளும் முற்றிலும் வேறுபட்ட விபரங்களுடன் கூடிய வெவ்வேறு நிகழ்ச்சிகள் ஆகும். [19]அற்புதமான குணமாகுதலை மிகவும் விரும்பிக் கேட்கும் மனிதனிடத்தில் பெரும்பாலும் விசுவாசம் இருக்கும். ஆனால், மத பொய் கலைஞர்கள் தங்கள் சொந்த மாய்மாலத்தை மறைப்பதற்காக வேண்டி, வியாதியுள்ள மனிதன் குணம் பெறாதமைக்கு அவனிடத்தில் விசுவாசமின்மையே காரணம் என்கின்றனர். [20]சில வேளைகளில் அற்புதத்தைப் பெறுபவர் பக்கம் உள்ள விசுவாசம் குறிப்பிடப்பட்டுள்ளது; சில வேளைகளில் இது குறிப்பிடப்படவில்லை. சில வேளைகளில் அற்புதத்தைப் பெறுவரிடம் விசுவாசமே இருந்ததில்லை என்பதற்கான சான்றும் உள்ளது. தொற்காளிடம் எவ்வளவு விசுவாசம் இருந்தது (அப். 9)?*

*[21]இவ்விடத்தில் பேதுருவின் உறுதிமொழியானது, கிறிஸ்துவின் நாமத்தினாலே அப்போஸ்தலர்களால் குணமாக்கப்படும் சம்பவங்களில் இதுதான் முதலாவது என்று வெளிப்படுத்துவதில்லை; ஆனால் பதிவு செய்யப்பட்ட சம்பவங்களில் இதுதான் முதலாவதாக உள்ளது. [22]யூதேயாவின் ஏழு மந்திரவாதிகள் இதுபோல நினைத்துத் தவறு செய்தது, அவர்கள் சாலையில் நிர்வாணமாக ஓடுவதில் முடிந்தது (19:13-16). [23]அவன், இயேசு ஆலயத்திற்கு வந்திருந்த அநேக நாட்களில் அங்கிருந்திருக்கக் கூடும், பெந்தெகொஸ்தே நாளின் நிகழ்ச்சிகள் இங்கு குறிப்பிடவில்லை. [24]இது மருத்துவராகிய லூக்கா தருகின்ற மருத்துவமனைக் குறி ப்புகள் ஆகும். [25]*NIV*யில் "அவன் தன் பாதங்களால் குதித்தான்" என்றுள்ளது. [26]Psuche என்பது "ஆ த்துமா" என்பதற்குப் பொதுவான கிரேக்க வார்த்தையாகும், ஆனால் இவ்வார்த்தை "*psychology*" என்பதில் (மனதைப்பற்றிய கல்வி) உள்ளது போல ''மனதிற்கு'' பயன்படுத்தப்பட்டுள்ளது. [27]சிலருக்கு இவ்விதமான கூற்றுகள், தேவன் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்ததுபோல அவ்வளவு வல்லமையுள்ளவராய் இப்போது இருப்ப தில்லை என்றோ அல்லது புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த முக்கியமான சிலவற்றை நாம் இன்று இழந்துள்ளோம் என்றோ கூறுவதாகத் தோன்றுகின்றன. ஆதி கிறிஸ்தவர்களின் அன்றாட வாழ்க்கையில் அற்புதங்களின் அவசியம் அதிகமாய்க் கூறப்பட்டுள்ளது. அற்புதங்கள் செய்யும் வல்லமையிருந்ததால் அவர்கள் சிறந்த மனிதர்கள் ஆகிவிடவில்லை*

அல்லது அது அவர்களைப் பரலோகம் செல்ல ஆயத்தப்படுத்தவில்லை (1 கொரி. நிருபத்தைக் காணவும்). மேலும் சரீர சுகத்தின் முக்கியத்துவம் மிகைப்படுத்தப்பட்டது. நம்மில் யாரும் சுகவீனமாயிருப்பதை விரும்ப மாட்டோம், ஆனால் சுகவீனத்திலும் மதிப்பிருக்கக் கூடும் (சங். 119:71). ஆனால் ஆவிக்குரிய சுகமே உண்மையில் மிகவும் முக்கியமானது என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். இன்று, கிறிஸ்தவத்தில் நிரந்தர மதிப்பீடுள்ள ஒவ்வொன்றையும் நாம் இன்னும் பெற்றுள்ளோம். [28]NIVயில் ''அவர்கள் அவனை அடையாளம் கண்டுகொண்டனர்'' என்றுள்ளது. [29]நாம் 4:1-4ல் காண்கிறபடி, யூதத் தலைவர்களுக்கும் செய்தி பரவிற்று. [30]இவை யாவும் எங்கு நடந்தன என்றோ, எந்த வரிசைப்படி சம்பவங்கள் நடந்தன என்றோ லூக்கா விபரம் தரவில்லை. நான் கொடுத்துள்ள காட்சி நடைபெற்றிருக்கச் சாத்தியக் கூறுள்ளதாகும்.

[31]மேற்கத்திய வசனமானது இப்பகுதியை விரிவாக்கி, "பேதுருவும் யோவானும் வெளியே வரும்போது, அவர்களைப் பற்றிக்கொண்டு அவனும் அவர்களுடன் வந்தான்" எ ன்றுள்ளது. அந்தப் பிச்சைக்காரன், அப்போஸ்தலர்கள் தனக்கு என்ன செய்தனர் என்று மற்றவர்களுக்குக் கூறும் வகையில், அப்போஸ்தலர்களுடன் நெருங்கி நின்றான் என்று நான் உருவகப் படுத்தியுள்ளேன் - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால் இது நன்றியுணர்வின் வெளிப்பாடு ஆகும். சிலர், அந்தப் பிச்சைக்காரன், தான் ஒரு மாயமான தொடுதலினால் குணம் பெற்றதாக நம்பியதாகவும், அவர்கள் சென்றுவிட்டால் தான் முன் இருந்த நிலைக்குச் சென்று விடுவோமோ என்று பயந்ததால் அப்படிப் பற்றிக் கொண்டதாகவும் கூறுவர். ஆனால் அவன் அவர்களுக்கல்ல, தேவனுக்கே துதி செலுத்தியதால் இது சாத்தியமற்றதாய்க் காணப்படுகிறது. [32]லூக்கா இதை "சாலமோனின் மண்டபம் என்னப்பட்ட" மண்டபம் என்று குறிப்பிடுகின்றார், ஏனெனில் இது சாலமோனின் ஆலய மூல வரைபடத்தில் ஒன்றாக இருந்ததாய்ப் பாரம்பரியம் கூறியது. ஆனால் இதற்கான ஆதாரம் எதுவும் இல்லை. உண்மையில் அப்படியில்லாமல் இருப்பதற்கான ஆதாரங்களே அதிகம் உள்ளன. KJVயில் இது "சாலமோனின் மண்டபம்" என்றும் NIVயில் இது "சாலமோனின் தூண் வரிசைகள்" என்றும் உள்ளது. [33]இது புறஜாதியாரின் முற்றம் நோக்கித் திறந்த வாசலுடையதாய் இருந்தது. [34]புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் நடந்த அற்புதங்களுக்கும், இன்று நடப்பதாகக் கூறப்படும் அற்புதங்களின் கூட்டத்திற்கும் உள்ள இன்னொரு வேறுபாடு: அந்நாட்களில் முதலில் அற்புதம் ஒன்று நடந்து அதன் மூலம் மக்களின் கவனம் ஈர்க்கப்பட்டு, அவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது; அப்போஸ்தலர்களின் மேன்மையும் அதில் விளங்கியது. இந்த நாட்களில் பொதுவாக, முதலாவது ஒரு பிரசங்கம் செய்து அதன் மூலம் மக்களின் உணர்வுகளைத் தூண்டியெழுப்பி அதன் பிறகு குணப்படுத்தும் நிகழ்ச்சி நடக்கிறது. அந்நாட்களில் பிரசங்கம் செய்தல் முக்கியமானதாய் இருந்தது, இந்நாட்களில் குணப்படுத்துதல் முக்கியமானதாய்க் காணப்படுகிறது.